# The Baptist Tabernacle of Los Angeles

Mailing Address:
P. O. Box 15308
Los Angeles, CA 90015
Phone: (213) 744-9999
E-mail: rlhymersjr@sbcglobal.net
www.sermonsfortheworld.com
www.baptisttabernacle.com




Jack Ngann
Pastor

Dr. R. L. Hymers, Jr.
Pastor Emeritus

டிசம்பர் - 2022

அன்புள்ள நண்பருக்கு:

நான் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன். நான் என்னுடைய பிள்ளைகளைக்குறித்து மிகவும் பெருமிதம் கொள்ளுகிறேன். எனது மகன் வெஸ்லி தமது அருமையான வேலை மற்றும் அவரது சபை ஊழியங்களை செய்துகொண்டு அரிசோனாவில் வசிக்கிறார். அவருடைய முதல் புத்தகம் அடுத்த ஆண்டில் பிரசுரமாகும்! லெஸ்லி ஒரு வெற்றிகரமான வியாபார வல்லுனர் மற்றும் அவர் தமது மனைவி ஜின்னோடும் மற்றும் பிள்ளைகள் ஹேனா, சாரா, மற்றும் ராபர்ட் IV உடன் லா கெனடா-பிலின்டிரிட்ஜில் உள்ள ஒரு அழகான வீட்டில் வசிக்கிறார், அவர் எனக்கும் இல்லியானாவுக்கும் தூரமாக இல்லை. இந்த வருட வசந்த காலத்தில் ராபர்டி IVன் முதலாவது பிறந்த நாளை கொண்டாட நாங்கள் சென்றிருந்தோம். அவன் இப்பொழுது 1 1/2 வருட சிறுவனாக இருக்கிறான். அவனுக்கு ஒரு அருமையான எதிர்கால வாழ்க்கை இருக்கிறது என்று நான் நிச்சயமாக இருக்கிறேன் !

ஆகஸ்டு மாதத்தில் நாங்கள் குடும்பத்துடன் வடக்கு சான் பிரான்ஸ்ஸிஸ்கோவின், மார்டின் கெளண்டியில் உள்ள சபைக்கு, 50வது வருட ஆரம்ப விழாவை கொண்டாட சென்றோம், அது 1972ல் நானும் எனது நண்பர்களான மைக் ரிலே மற்றும் ரோகர் ஆப்மேன் அவர்களுடன் உருவாக்கின சபையாகும். அவர்களை மறுபடியும் பார்ப்பது மிகவும் நன்றாக இருந்தது, மற்றும் அந்த அற்புதமான நேரத்தில், எனது பழைய நண்பர்களான மாற்கு பக்லே மற்றும் கென்ட் பில்போட் மற்றும் அநேகர் எங்களோடுகூட இருந்தார்கள். மைக் ரிலேவின் மகன் ஜோன் அந்த சபையின் இப்போதய பாஸ்டராக இருக்கிறார். இந்த சபையின் ஊழியத்தின் மூலமாக உலக முழுவதிலும் நாற்பது சபைகளுக்கு மேலாக நிறுவப்பட்டுள்ளன. மெய்யாகவே தேவனுடைய கனி அபரிமிதமானதாக இருக்கிறது!

**நீங்கள் எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை பாடங்களையும் பிரசங்கங்களையும் நாற்பத்தி ஆறு மொழிகளில்**
***www.sermonsfortheworld.com***
**என்ற இணையதளத்தில் படிக்கலாம்.**

சான் காபிரியேலில் உள்ள நமது புதிய கட்டிடத்தில் நாம் சந்திக்கவிருக்கும் நேரம் எப்பொழுதும் நெருங்கி கொண்டிருக்கிறது. வேலை ஏறக்குறைய முடிவடைந்து விட்டது, நகரம் மற்றும் நாட்டின் அவசியமான உத்தரவுகளை பெறுவதற்காக நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம். தேவன் என்னை நீண்ட காலங்களுக்கு முன்பாக அழைத்து சீன மக்களுக்காக செய்ய சொன்ன ஊழியத்தை, நமது புதிய சபை செய்யக்கூடியதாக இருக்கும். இந்த பகுதியானது சீன மக்கள் மிகவும் அதிகமாக நிறம்பியுள்ள ஒரு பகுதியாக உள்ளது மற்றும் இதற்கு "மிகப்பெரிய லாஸ் ஏன்ஜல்சின் சீன பாப்டிஸ்டு ஆசரிப்பு கூடாரம்" என்று பெயரிடப்பட்டுள்ளது. சீனாவிலிருந்து நமது சபைக்கு வந்து கொண்டிருக்கும் மக்கள் ஏற்கனவே நம்மிடம் உள்ளனர். ஜேக் நாஹன், நமது புதிய பாஸ்டராக, பதினைந்து நாட்களுக்கு ஒரு தரம் போதனைகளை பிரசங்கிக்கிறார். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கூட்டம் முடிந்த பிறகு இழக்கப்பட்ட மக்களை கிறிஸ்துவை நம்பசெய்து அவரிடம் கொண்டுவரும்படியாக டாக்டர் கிறிஸ்டோபர் கேஹன் அவர்களுடன், இவரும் இணைந்து ஆலோசனை வழங்கி செயல்படுகிறார்கள்.

செப்டம்பரில் இல்லியானாவின் தகப்பனார், ராபாயில் கூயிலர் அவர்கள், குவாட்டாமாலாவிலிருந்து தம்முடைய மகன் ஜார்ஜ் அவர்களுடன் எங்களை காண வந்திருந்தார்கள். ராபாயில் ஒரு அமைதியான மனிதராவார். அவருக்கு இப்பொழுது 92 வயதாகிறது மற்றும் அவர் சரீரத்திலும் மனதிலும் இன்னும் வல்லமையோடு காணப்படுகிறார். அவர் எனது மாமனார் என்பதில் நான் பெருமையடைகிறேன். அவர் தமது பேரபிள்ளைகளான லெஸ்லி மற்றும் வெஸ்லியோடு, டாட்கெர்ஸ் பேஸ்பால் விளையாட்டைக் காண்பதில் மகிழ்ச்சி அடைவார். ஒரு நாள் நாங்கள் அவரை சேன்டா மோனிகா பியருக்கு அழைத்து சென்று அவரோடு ஆனந்தமான நேரத்தை அனுபவித்தோம்!

என்னுடைய இரண்டு சிறப்பான நண்பர்களை பற்றி நான் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன். ஒருவர் டாக்டர் டேவிட் ஸ்டெர்ன். அவர் தனது 86வது வயதில் அக்டோபர் மாதத்தில் எருசலேம் சென்று அங்கிருந்து பரலோகத்துக்கு சென்றார். இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுக்கு நாங்கள் தேனிலவு சென்றிருந்த சமயத்தில் அவரும் அவரது மனைவி மார்த்தா அவர்களும் எங்கள் பிரயாண செலவுகளை தாராளமாக ஏற்றுக்கொண்டார்கள். நாங்கள் அவரது வீட்டிலே தங்கினோம். டேவிட் அவர்கள் மேசியானிக் யூதயிஸத்தை தோற்றுவித்தவர்களில் ஒருவராவார். அவரது மிகப்பெரிய வேலையானது, "முழு யூத வேதாகமத்தை" உருவாக்குவதாகும், அது ஒரு கிறிஸ்தவ யூத வேர்களின் உறுதியான சாட்சியாகும். இயேசுவானவர், யூதர்களுக்கும் அதேபோன்று புறஜாதியாருக்கும் உரியவர் என்பதை இது காட்டுகிறது, மற்றும் என்றென்றுமாக தெரியப்படுத்தும் என்பது நிச்சயமாகும்.

என்னுடைய இரண்டாவது சிறப்பு நண்பர் அநேக ஆண்டுகளாக சீன இறைபணியாளராக இருந்த, டாக்டர் பில் ஹாத்தாவே அவர்கள் ஆகும். அவர் தேவனால் அழைக்கப்பட்ட ஒரு பிரசங்கி ஆவார். அவர் 92 வயதானவராக, புற்று நோயாளியாக, மற்றும் ஒரு இருதய நோயுடையவராக இருந்தாலும், அவர் இன்னும் அமெரிக்க மற்றும் சீன மக்களுக்கு கிறிஸ்துவை பிரசங்கிக்கிறார். அந்த மனிதர் அமைதியாகவே இருக்கமாட்டார்! நான் பில் அவர்களை மதிக்கிறேன் மற்றும் அதிகமாக நேசிக்கிறேன்.

***நீங்கள் எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை பாடங்களையும் பிரசங்கங்களையும் நாற்பத்தி ஆறு மொழிகளில் www.sermonsfortheworld.com என்ற இணையதளத்தில் படிக்கலாம்.***


என்னுடைய மனைவி இல்லியானா இந்த உலக முழுவதிலும் உள்ள எல்லாரையும்விட மிகவும் அதிகமாக என்னை நேசிக்கிறவர் மற்றும் அக்கரையோடு கவனிக்கும் மனைவியாகும். நான் எப்பொழுதும் கேட்பதைவிட அவள் மிகவும் அதிகமானவளாகும். எங்களுடைய 40வது விவாகநாளாக செப்டம்பர் 27 இருந்தது. 25ல் சபையாரும் எங்கள் மகன் ராபர்ட் லெஸ்லி IIIயும் பர்ன்பேங்கில் உள்ள காஸ்டாவே ரெஸ்டாரண்டில் ஒரு பிரமாண்டமான விவாகநாள் விருந்தை எங்களுக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். சபை மக்கள் வீடியோவில் சாட்சிகளை கொடுத்தார்கள். என்னுடைய மகன்கள் ஜான் வெஸ்லி மற்றும் ராபர்ட் லெஸ்லே நேரில் பேசினார்கள், அதேபோல எங்கள் புதிய பாஸ்டர், ஜேக் நாஹன் அவர்களும் பேசினார்கள். என்னுடைய பழைய நண்பர் டாக்டர் ஜேக்சன் லாவு அவர்கள் சீன சபையிலிருந்தும் மற்றும் எனது உயர்நிலைபள்ளி தோழர் கிளாயர் பைப்பீ அவர்களையும் பார்த்ததினால் நான் மிகவும் ஆனந்தம் அடைந்தேன். அந்த நேரம் எங்களுக்கு மிகவும் அற்புதமான நேரமாக இருந்தது!

கடந்த ஆண்டிலே எனக்கு ஒரு தாக்குதல் ஏற்பட்டது. ஆனால் என்னை வெளியாளாக கணக்கிட வேண்டாம்! நான் சிறிது காலம் அருகாமையில் இருக்க திட்டமிட்டு இருந்தேன். ஒரு சமயம் எனது டாக்டர் சொன்னார், “உங்களுக்கு ஒரு எருதை போன்ற அமைப்பு ஏற்பட்டு இருக்கிறது” என்று. சில வருடங்களுக்கு முன்னர், இப்பொழுதிருந்து பத்து வருடங்களுக்கு பிறகு வரவிருக்கும் எங்களது 50வது விவாகநாள் வரைக்கும், நான் வாழவேண்டும் என்று நான் ஜெபம் செய்தேன். தேவன் கிருபை செய்யும் பட்சத்தில், நான் அங்கே இருப்பேன் என்று நம்புகிறேன்!

இன்னும் ஒருமுறை எழுப்புதலை காணவேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன். என்னுடைய பிரியமான சங்கீதம் சொல்லுகிறது, “நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன்” (சங்கீதம் 27:13). நான் கர்த்தருடைய நன்மையைக் கண்டேன் – எழுப்புதலை – சீன சபையிலும், இயேசுவானவரின் இயக்கத்திலும் கண்டேன். நமது சொந்த சபையிலே இன்னும் ஒரு எழுப்புதலை, நான் காண வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்!

இந்த கிறிஸ்து பிறந்த நேரத்தில் நான் ஜெபிக்கிறேன், “கர்த்தாவே, அப்படியே ஆகட்டும்” என்று. தேவனுடைய சொல்லி முடியாத ஈவாகிய (II கொரிந்தியர் 9:15) தம்முடைய குமாரன் நமக்காக பிறந்து மரிக்க அனுப்பினதை நீங்கள் கொண்டாடும்போது ஒரு அற்புதமான நேரத்தை அனுபவிப்பீர்களாக!

**நீங்கள் எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை பாடங்களையும் பிரசங்கங்களையும் நாற்பத்தி ஆறு மொழிகளில் *www.sermonsfortheworld.com* என்ற இணையதளத்தில் படிக்கலாம்.**



திறக்கப்பட்ட சபை கதவுகள் 50வது வருட நிகழ்ச்சியின் போது வி என்றால் வெற்றி என்ற அடையாளத்தை நான் கொடுக்கிறேன்!



முன்வரிசை: ராபர்ட் III ஹேனா மற்றும் சாராவுடன், இல்லியானா ராபர்ட் IVஐயும், என்னையும் பிடித்துக்கொண்டு. பின்வரிசை: லிண்டா, ஜின், ராப்பாயில் மற்றும் ஜார்ஜ் கூயிலர், மற்றும் இல்லியானாவின் சகோதரன் எர்வின் கூயிலர்.

இயேசுவின் நாமத்தினால்
உங்களுடைய,




ரெவரண்ட் ஆர். எல்.
ஹைமர்ஸ், ஜூனியர்,
D.Min., D.Rel., Th.D., Litt.D.
பிலிப்பியர் 4:13



ராபர்ட் IVன் முதலாவது பிறந்த நாள். இடமிருந்து வலம்: ஜின்னின் தகப்பனார் திருவாளர் கிம், ஒரு கொரியன் பாரம்பரிய உடையில் ஜின், சாரா, ராபர்ட் III பற்றிக்கொண்டு இருக்கும் ராபர்ட் IV, ஒரு நல்ல சிரிப்போடு நான், இல்லியானா, சாரா, வெஸ்லி, மற்றும் இல்லியானாவின் தாயார் லிண்டா.



நானும் எனது குடும்பமும் எனது பழைய நண்பர் மைக் ரில்லேவுடன் (எனது வலது பக்கம்) மற்றும் ஸ்டீவ் மற்றும் நான்சி கிராஸ், சபையின் நீண்ட கால உறுப்பினர்கள் ஆவார்கள், மறுசந்திப்பின் போது.



என்னுடைய பேரப்பிள்ளைகளான, சாரா, ராபர்ட் மற்றும் ஹேனாவை நான் அணைத்துக்கொள்ள விரும்புகிறேன்!



எங்களுடைய இரட்டை மகன்களான ஜான் வெஸ்லி மற்றும் ராபர்ட் லெஸ்லி அவர்களுடைய பிறந்தநாளில் நான் மற்றும் ராபர்ட் IV உடன்.



எங்களுடைய 40ஆம் ஆண்டு விவாக நாளில் டாக்டர் ஜேக்சன் லாவு அவர்களுடன் நான் மற்றும் இல்லியானா.



நான் மற்றும் இல்லியானா எங்களுடைய 40ஆம் ஆண்டு விவாகநாளின் கொண்டாட்டத்தின் போது 25ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட புகைப்படத்தின் முன்

**நீங்கள் எங்களுடைய நூற்றுக்கணக்கான வார்த்தைக்கு வார்த்தை பாடங்களையும் பிரசங்கங்களையும் நாற்பத்தி ஆறு மொழிகளில் *www.sermonsfortheworld.com* என்ற இணையதளத்தில் படிக்கலாம்.**